# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, வெளிநாட்டுக் கடன்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1984, ஓகத்து மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---


*1984, ஓகத்து மாதம் 24 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 45* *தபாற் செலவு : சதம் 60*

# 1984 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, வெளிநாட்டுக் கடன்கள் (திருத்தச்) சட்டம்

[1984, ஓகத்து மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஒ. 38/83
1634

1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, வெளிநாட்டுக் கடன்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1984 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, வெளிநாட்டுக் கடன்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதாம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தால் மாற்றீடு செய்யப்பட்ட, 1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, வெளிநாட்டுக் கடன்கள் சட்டத்தின் 5 ஆம் பிரிவு, "வெளிநாட்டுக் கடன்" என்பதன் விரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

'"வெளிநாட்டுக் கடன்" என்பது,—

(அ) வெளிநாட்டு அரசாங்கம் ஒன்றினால் அல்லது வெளிநாட்டு அரசாங்கமொன்றின் முகவர் நிலையத்தால் ; அல்லது

(ஆ) ஏதேனும் சர்வதேச ஒழுங்கமைப்பினால் ; அல்லது

(இ) பொதுவில் அல்லது ஒரு குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறாக, அல்லது கொடுக்கல் வாங்கலின் தன்மையைக் கருத்திற்கொண்டு, அத்தகைய ஆளின் அல்லது ஆட்கள் குழுவின் ஆளடையாளத்தை விரைவாக ஆய்ந்தறிய முடியாதென அமைச்சர் அபிப்பிராயப்படுமிடத்து, அமைச்சரால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக இலங்கைக்கு வெளியில் இருக்கும் ஆளொருவரால் அல்லது ஆட்கள் குழுவொன்றினால் (இது கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி),

இலங்கை அரசாங்கத்துக்கு அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு அல்லது பகிரங்கத் தொழில் முயற்சிக்கு ஏதேனும் நாணயத்தில் அளிக்கப்படும் ஒரு கடன் அல்லது ஏதேனும் விதமான நிதிக் கடன் அல்லது நிதிசார் கடனுதவி என்று பொருளாகும் என்பதுடன்,—

(i) விடயத்துக்கேற்றவாறு, இலங்கை அரசாங்கத்துக்கும் அப்பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கும் அல்லது அப்பகிரங்கத் தொழில் முயற்சிக்கும், இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளுக்கும் இடையிலான ஏதேனும் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் விடயத்திற்கேற்றவாறு இலங்கை அரசாங்கத்திற்கு அல்லது அப்பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற்கு அல்லது அப்பகிரங்கத் தொழில்முயற்சிக்கு உள்ள ஏதேனும் பொறுப்பை விடுவிக்கின்றதான அத்தகைய ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்திற்கு, முகவர் நிலையத்திற்கு, ஒழுங்கமைப்பிற்கு, ஆளுக்கு அல்லது ஆட்கள்

2—எ 077931—2,650 (10/84)

குழுவுக்குச் செலுத்துவதற்கு விடயத்திற்கேற்றவாறு இலங்கை அரசாங்கம் அல்லது அப்பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது அப்பகிரங்கத் தொழில்முயற்சி பொறுப்பேற்கும் ஏதேனும் பணத்தொகையையும்; அத்துடன்

(ii) பொதுவில் அல்லது ஒரு குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக அல்லது கொடுக்கல்வாங்கலின் தன்மையைக் கருத்திற்கொண்டு அத்தகைய ஆளின் அல்லது ஆட்கள் குழுவின் ஆளடையாளத்தை விரைவாக ஆய்ந்தறிய முடியாதென அமைச்சர் அபிப்பிராயப்படுமிடத்து, அமைச்சரால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான இலங்கைக்கு உள்ளே இருக்கும் ஆளொருவரால் அல்லது ஆட்கள் குழுவொன்றினால் (இது கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ் சரி, கூட்டிணைக்கப்படாததாயினுஞ் சரி), இலங்கை அரசாங்கத்திற்கு அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற்கு அல்லது பகிரங்கத் தொழில்முயற்சிக்கு இலங்கை ரூபாவிலன்றி வேறு ஏதேனும் நாணயத்தில் அளிக்கப்படும் ஏதேனும் கடனையும் அல்லது ஏதேனும் விதமான நிதிக் கடனையும் அல்லது நிதிசார் கடனுதவியையும்,

உள்ளடக்கும்.'.